**தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட்,**
**பதிவு அலுவலகம்: 57, V.E. ரோடு, தூத்துக்குடி**
**கமுதி கிளை,**
**எண்.606/933, நாடார் பஜார், கமுதி - 623 603**
***CIN No: L65110TN1921PLC001908***

**பதிவுத் தபால் ஒப்புகையுடன்**

தேதி : 30.05.2026

**To**

1. **M/s. நாச்சியார் எண்டர்பிரைஸ், உரிமை: திரு.K.மாரிமுத்து** **கடன்தாரர்**
எண்.28, குறுக்கு தெரு, இடைச்சனூரினி, கமுதி - 623 603

2. **திரு.K.மாரிமுத்து த/பெ கருப்பையா** **உரிமையாளர்**
எண்.15-8, மேலக்கார தெரு, வார்டு எண்.9, கமுதி - 623 603

தற்போதைய முகவரி: எண்.58-2, பல்லாக்குக்கார தெரு, முத்துமாரியம்மன் நகர், கமுதி - 623 603

3. **திருமதி.M.சித்ரா க/பெ திரு.K.மாரிமுத்து** **ஜாமீன்தாரர் / அடமானதாரர்**
எண்.15-8, மேலக்கார தெரு, வார்டு எண்.9, கமுதி - 623 603

தற்போதைய முகவரி: எண்.58-2, பல்லாக்குக்கார தெரு, முத்துமாரியம்மன் நகர், கமுதி - 623 603

**ஏல விற்பனை அறிவிப்பு**

2002-ம் ஆண்டு கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிசொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 8(6) & 9(1)-ன் கீழ் வங்கியிடம் அடமானத்தில் உள்ள அசையா சொத்தின் விற்பனை:

இதனால் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள் **M/s.நாச்சியார் எண்டர்பிரைஸ், உரிமை: திரு.K.மாரிமுத்து** மற்றும் **ஜாமீன்தாரர்: திருமதி.M.சித்ரா க/பெ திரு.K.மாரிமுத்து** அவர்களுக்கு அறிவிப்பது என்னவென்றால் தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கியின் **கமுதி** கிளையில் அடமானமாக வைக்கப்பட்டுள்ள கீழே குறிப்பிட்டுள்ள அசையா சொத்து மேற்படி வங்கியின் மதுரை மண்டலத்தின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் அடையாள சுவாதீனம் செய்யப்பட்டு "உள்ள இடத்தில் உள்ளவாறு" "உள்ள நிலையில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் எங்களது தமிழ்நாடு மெர்க்கன்டைல் வங்கி, **கமுதி** கிளைக்கு வரவேண்டிய பாக்கித்தொகை **30.04.2026 வரை ரூ.46,64,528.10 (ரூபாய் நாற்பத்தி ஆறு லட்சத்து அறுபத்தி நான்காயிரத்து ஐநூற்றி இருபத்தி எட்டு மற்றும் பைசா பத்து மட்டும்)** மற்றும் பின்வரும் வட்டி மற்றும் செலவு தொகையை சேர்த்து வசூல் செய்வதற்காக **24.06.2026** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என தெரிவிக்கப்படுகிறது. ஏல நிர்ணயத்தொகை **ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்) மற்றும் முன்வைப்புத் தொகை ரூ.5,00,000/-.**

ஏலவிபரம்

மேலே சொல்லப்பட்டுள்ள நபர் 30.04.2026 வரை செலுத்த வேண்டிய பாக்கித்தொகை **ரூ.46,64,528.10 (ரூபாய் நாற்பத்தி ஆறு லட்சத்து அறுபத்தி நான்காயிரத்து ஐநூற்றி இருபத்தி எட்டு மற்றும் பைசா பத்து மட்டும்)** மற்றும் பின்வரும் வட்டி, செலவுத் தொகைக்காகவும் சேர்த்து கீழே குறிப்பிட்டுள்ள சொத்து **24.06.2026** அன்று பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.

| | |
|---|---|
| **ஏலம் நடைபெறும் இடம்:** | **தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிமிடெட், கமுதி கிளை,<br>எண்.606/933, நாடார் பஜார், கமுதி - 623 603<br>தொலைபேசி: 04576 - 223236<br>செல்: 98421 03236 & 98421 45637** |
| **ஏலம் நடைபெறும் தேதியும், நேரமும்:** | **24.06.2026 & பிற்பகல் 04.30 மணி (புதன்கிழமை)** |
| **ஏல நிர்ணயத்தொகை** | **ரூ.50,00,000/- (ரூபாய் ஐம்பது லட்சம் மட்டும்)** |

**அசையா சொத்தின் விபரம்**

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் பதிவு மாவட்டம், கமுதி துணை பதிவு மாவட்டம், கமுதி தாலுகா, கமுதி கிராமம், பல்லாக்குக்கார தெரு, முத்துமாரியம்மன் நகரில் தற்போதைய 6வது வார்டில் கட்டுப்பட்ட பழைய பட்டா எண் 7179, புதிய பட்டா எண்.7626ல் கண்ட பழைய சர்வே 597/1, புதிய சர்வே 597/1A5க்கு 1754 சதுரடி அளவுள்ள மனைநிலம் மற்றும் அதில் கட்டப்பட்டுள்ள கதவு எண்.58-2 கொண்ட குடியிருப்பு கட்டிடம் மற்றும் சகலமும்.

**நான்குமால்**

வடக்கு முனியசாமி பெயரில் உள்ள 29ம் நம்பர் பிளாட்.
தெற்கு :- 12 அடி அகலமுள்ள கிழமேல் பொதுப்பாதை
கிழக்கு :15 அடி அகலமுள்ள தென்வடல் பொதுப்பாதை
மேற்கு :- K.முருகன் அவர்களின் பிளாட்.

இந்த நான்குமாலுக்குள்பட்டதில் கிழமேல் வடபுரம் 45 1/2 அடி, கிழமேல் தென்புறம் 39அடி; தென்வடல் கீழ்புரம் 42 அடி, தென்வடல் மேல்புரம் 41 அடி.

மேற்கூறிய சொத்து **திருமதி.M.சித்ரா க/பெ திரு.K.மாரிமுத்து** பெயரில் உள்ளது.

